J2/N88/L

**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – மேல்நிலைக்கல்வி – தரம் உயர்த்தப்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளிகள் – முதுகலை ஆசிரியர் 900 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டது – 23.09.2015 முதல் ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வி (ப.க2(1)துறை**

அரசாணை (1டி) எண்.37

நாள் : 01 .02.2016
திருவள்ளுவர் ஆண்டு 2047
தை மாதம் 18–ஆம் நாள்.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை(நிலை) எண்.148, ப.க.(ப.க2(2)த் துறை, நாள் 22.09.2014.
2. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித எண்.068991/எல்/ இ3/2015, நாள்– 29.09.2015.

************

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி 2014–15ஆம் கல்வியாண்டில் 100 அரசு/மாநகராட்சி/ நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தி புதிய பணியிடங்கள் தோற்றுவித்து ஆணையிடப்பட்டது. மேலும் தரம் உயர்த்தப்பட்ட 100 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள், மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்ட 100 பள்ளிகளில் ஒவ்வொன்றிற்கும் (9300–34800+4800) தர ஊதிய விகிதத்தின்கீழ் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வரலாறு, பொருளியல், வணிகவியல் என 9 பாடங்களுக்கு 9 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 900 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் அவை நிரப்பப்படும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக ஒப்பளிப்பு செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேற்காணும் அரசாணையின்படி, தோற்றுவிக்கப்பட்ட 900 முதுகலை ஆசிரியர் தற்காலிக பணியிடங்களுக்கு 22.09.2015உடன் ஒப்பளிப்பு காலம் நிறைவு பெற்றுள்ளது. 900 முதுகலை ஆசிரியர் பணியிடங்களுக்கு 22.09.2015 அன்றுடன் ஒப்பளிப்பு முடிந்துவிட்ட நிலையில் 23.09.2015 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

2. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு அரசாணை(நிலை) எண்.148, ப.க.(ப.க2(2)த் துறை, நாள் 22.09.2014–ன்படி தோற்றுவிக்கப்பட்ட 900 முதுகலை ஆசிரியர் தற்காலிக பணியிடங்களுக்கு 23.09.2015 முதல் 22.09.2016வரை ஓராண்டிற்கு அல்லது தற்காலிக பணியிடங்களுக்கான தேவை குறித்து நிதித் துறையின் மறு ஆய்வில் முடிவெடுக்கும் வரை இதில் எது முந்தையதோ அதுவரை தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. மேற்குறிப்பிட்டுள்ள பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.:–

i. <u>அரசுப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு</u>

"2202–பொதுக்கல்வி– 02 இடைநிலைக் கல்வி– 109 அரசு இடைநிலைப் பள்ளிகள்– I - திட்டத்தில் சேராதது– AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம்– 01 – சம்பளங்கள்.
(த.தொ.கு 2202–02–109 AA 0108)"

ii. <u>நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு:–</u>

"2202–பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி– 109 அரசு இடைநிலைப் பள்ளிகள்– I - திட்டத்தில் சேராதது – AB நகராட்சி மற்றும் மாநகராட்சி இடைநிலை / மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள்–01 – சம்பளங்கள்.
(த.தொ.கு. 2202–02–109–AB–0106)"

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.1851/நிதி(கல்வி–II)/2016 நாள்–21.01.2016–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–79.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
சார் சம்பள கணக்கு அலுவலர்,
சென்னை மாநகராட்சி, சென்னை–3.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–15.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர், சென்னை–35.
<u>நகல்</u>
நிதிக் (கல்வி II)துறை, சென்னை–9.
இ.கோ./உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர். 3/2/16